# கத்தார் அமீருடன் பாரத பிரதமரின் சந்திப்பு

பிப்ரவரி 15, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று தோஹாவில் உள்ள அமிரி அரண்மனையில் கத்தார் அமிர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி அவர்களை சந்தித்தார்.

2. பிரதமருக்கு அமிரி அரண்மனையில் சம்பிரதாய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன்பிறகு, இரு தரப்பினரும் பிரதிநிதிகள் நிலையிலான வரையறுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். இதில் பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடுகள், எரிசக்தி கூட்டாண்மை, விண்வெளி ஒத்துழைப்பு, நகர்ப்புற உள்கட்டமைப்பு, கலாச்சார உறவுகள் மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்றது. பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

3. கத்தாரில் உள்ள 8 லட்சத்திற்கும் அதிகமான இந்திய சமுதாயத்தினரின் நலனில் அக்கறை காட்டியதற்காக அமீர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், கத்தாருடனான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் இந்தியா உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார். மேலும் அவர் விரைவில் இந்தியாவுக்கு வருமாறு அமீர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

4. பிரதமரின் கருத்தை ஏற்றுக் கொண்ட அமீர் அவர்கள், வளைகுடா பிராந்தியத்தில் மதிப்புமிக்க கூட்டாளியாக இந்தியாவின் பங்களிப்புக்கு பாராட்டுத் தெரிவித்தார். மேலும் கத்தாரின் வளர்ச்சியில் துடிப்பான இந்திய சமுதாயத்தின் பங்களிப்பையும், கத்தாரில் நடைபெற்ற பல்வேறு சர்வதேச நிகழ்வுகளில் அவர்கள் உற்சாகமாக பங்கேற்றதையும் அமீர் அவர்கள் பாராட்டினார்.

5. இந்த சந்திப்பைத் தொடர்ந்து அமிரி அரண்மனையில் பிரதமர் மோடி அவர்களுக்கு மதிய உணவு விருந்து அளிக்கப்பட்டது.

**தோஹா**
**பிப்ரவரி 15, 2024**